DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

............

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU

Calendar

Miscellaneous

Preliminary Register Case No. C.C. 9 of 2020 PW: 2

Sessions

| | |
|---|---|
| | Prosecution |
| Deposition of witness for | Defence |
| | Court |

Name : வெங்கடேசன்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11/10/2021.

தேதி..11.10.2021, **C.C. 9/2020,** அ.த.சா.2 **வெங்கடேசன்** அவர்களின் முதல் விசாரணை..

நான் நடுப்பந்தி குப்பம் கிராமத்தலிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சம்பவத்தின் போது நான் வெளியே சென்று விட்டு வந்தேன். அப்போது ஊரில் போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். நான் என்ன என்று கேட்டபோது அ.த.சா. 1 ன் செயினை யாரோ அறுத்து சென்று விட்டார்கள் என்று கூறினார்கள். நான் அதே ஊரை சேர்ந்தவர் என்பதால் போலீசார் என்னை இந்த வழக்கில் சாட்சியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது அ.த.சா.ஆ 3 ஆகும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் என்னுடைய ஊரில் தான் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். என்னை எனது ஊர் மற்றும் அ.த.சா.1 க்கு உறவினரா என்று மட்டும் தான் விசாரணை செய்தார்கள். போலீசார் ஊரில் விசாரணை செய்ததற்க்காக என்னை சாட்சியாக இருக்கச் சொன்னாகள் என்றால் சரிதான். சம்பவத்தின் போது நான் சம்பவயிடத்தில் இல்லை என்றால் சரிதான். பார்வை மகஜரிலுள்ள கையொப்பத்தை நான் எனது ஊரில் போட்டேன். எழுதிய தாளில் தான் நான் கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான். பார்வை மகஜரிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த பிறகு நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. என்னிடம் கையொப்பம் வாங்கிய பிறகு போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அ.த.சா 1 எனது சித்தப்பாவின் மனைவி. என்னிடம் மொத்தம் எத்தனை தாளில் கையொப்பம் நான் போட்டேன் என்று எனக்கு ஞாபகமில்லை. யார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். திருடுபோன நகை தராமல் எதிரியை மிரட்டி புதிய நகைதான் போலீசார் அ.த.சா.1 டம் கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. இது போன்ற சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்றாலும் அ.த.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக கையொப்பம் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்க்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.